சக்ரவர்த்தினி.

“ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி”

VOL - IX. தொகுதி - ௯ | NOVEMBER 1913. நவம்பர் 1913 | No - 4. பகுதி-௪.

நல்லொழுக்கம்.

நல்லொழுக்கமாவது: புறத்தொழுக்கம் அகத்தொழுக்கம் என இருவகைப்படும். புறத்தொழுக்கம் சரீரத்தைப்பற்றியது; அகத்தொழுக்கம் ஆன்மாவைப்பற்றியது. சரீரத்தைப்பற்றிய நல்லொழுக்கமாவது: சுத்தநீரில் ஸ்நானஞ் செய்தல், சுத்தவஸ்திரந் தரித்தல், சுத்தமும் ஆரோக்கியமுமுள்ள உணவுகளைப் புசித்தல், சுத்தநீரை அருந்தல், சுத்தவாயுவை உட்கொள்ளல், மயிர், எலும்பு, நகம், சுடுகாடு, பிணம், எச்சில், மலம், மூத்திர முதலியவற்றைத் தொடாதிருத்தல்; ஒட்டுநோயாளர், சுத்தமில்லாதவர், ருதுஸ்திரீ, பிரசவித்தவள், சவத்தைத்தீண்டினோர் முதலாயினாரைத்தீண்டாதிருத்தல், துர்க்கந்தவஸ்துக்களை முகராதிருத்தல் முதலியனவாம்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் காரணமான பஞ்சபூதங்கள் இயற்கையில் சமமேயாயினும் செயற்கையான காரிய வேறுபாட்டால் வித்தியாசப்படுகின்றன. நீர் ஒன்றேயாயினும் நிலவேறுபாட்டாலும்செயற்கை வேறுபாட்டாலும் சுத்தாசுத்தங்களை அடைவதுபோலப்பஞ்சபூதங்களும் காரியோற்பத்திவேறுபாட்டாலும்அவற்றின்செய்கை மாறுபாட்டாலும் சுத்தா சுத்தங்களை அடைகின்றன. ஒரே நிலத்தின் கண்ணுள்ள இரண்டு கிணறுகளுள் ஒன்று காலந்தோறும் நீர்வாரியிறைக்கப்படுவதாகியும், மற்றொன்று அவ்வாறு படாததாகியுமிருக்குமாயின், இறைக்கப்படுவது சுத்தமாகவும் இறைக்கப்படாதது அசுத்தமாகவும் இருப்பதைப் பார்க்கின்றோம். அவ்வாறே தினந்தோறும் சுத்தநீரில் ஸ்நானஞ்செய்தல்முதலிய நல்லொழுக்கங்களில் நாம் பழகிவருவோமானால் சரீரம், சுத்தமாயிருக்கும். சரீரத்தைப்பற்றியே மனம்நிற்றலால் அதுகாரணமாக மனமுந் தெளிவை அடையும். அதற்குமாறாகத்தீயவொழுக்கங்களில் பழகிவருவோமானால் சரீரம் அசுத்தப்பட்டு அதற்குப் பற்பல ரோகங்களுண்டாம்; அதுகாரணமாக மனமும் மாசடையும்; சுத்தவாயுவைப் பார்க்கிலும் அசுத்தவாயு பத்துப் பன்னிரண்டடி மீறிப்பரவுமெனப் பதார்த்த விஞ்ஞான சாஸ்திரிகளுரைக்கின்றனர். உடம்பு சுத்தமாயிராவிடில் எப்படிக் கீழ்மை அடைகின்றதோ, அப்படி

யே மனமுஞ் சுத்தமாயிராவிடில் சிழ்மை யடைகின்றது; உடல்சுத்தி மனத்தெளிவிற்கு ஏதுவாதலாலென்க. அது பற்றியே சாவுமுதலான வற்றைக் கண்டு மனம்வருந்துவோரும் கேட்டுமனம் வருந்துவோரும் சமமாக ஸ்நானஞ்செய்யக்கடவரென ஒழுக்கநூல்கள் விதிக்கின்றன. கண்டுமனம்வருந்துவோர்க்குப் பிணத்தினின்றும் எழுந்ததீயவாயு ஒழிவதோடுமனத்தெளிவையும், கேட்டு மனம் வருந்துவோர்க்கு மனத்தெளிவையும் ஸ்நானந் தருகின்றது. உயர்குலத்திற்பிறந்து தீய ஒழுக்கத்தைக் கைக்கொள்வதினும் தாழ்ந்த குலத்திற்பிறந்து நல்லொழுக்கத்தைக் கைக்கொள்வது சிறந்த தருமமாம். அதுபற்றியே "ஒழுக்கம் உயர்குலத்தினன்று" என ஞானத்தாயான ஔவை கூறினார். நல்லொழுக்கங்களை விடாமல் ஒழுகி வருவோமானால் தருமம் வளரும்; தருமம்வளரப் பாவங் குறையும்; பாவங் குறைய அறியாமை ஒழியும்; அறியாமை ஒழிய இதுநித்தியம் இது அநித்தியம் என்னும் விவேகமும் இம்மைமறுமைகளிலுண்டாகும் போலி இன்பங்களில் வெறுப்பும் பிறவித் துன்பங்களும் தோன்றும்; அவை தோன்றச் சாதுக்கள் சிநேகம், சற்குரு தரிசனம், தத்துவ ஆராய்ச்சி, மோக்ஷத்தினிடத்து ஆசை யென்னுமிவை யுண்டாம்; அவையுண்டாகப் பிறவிக்குக் காரணமான வீண் முயற்சிக ளெல்லாம் நீங்கி மோக்ஷத்திற்குக் காரணமான பரமேஶ்வர பக்தி யோக ஞானங்களுண்டாம்; அவை யுண்டாகப் பரமபதம் கிடைக்கும். இதுவே வேதாகமங்களால் சொல்லப்படும் முத்திநிலையாம். நல்லொழுக்கமாவது இவ்வளவு சிறப்பையும் நிரதிசயானந்த முத்தியையும் தருதலால் எல்லாச் சாதியாரும் எல்லாமதஸ்தரும் நல்லொழுக்கத்தையே உயிரைப்பார்க்கிலும் மேலானதாகக் கொள்வதவசியமாம். பொருள், அச்சம், டம்பம், பெருமையென்னுமிவை காரணமாக வின்றி ஆன்ம லாபத்தின்பொருட்டு யார் உண்மையாக நல்லொழுக்கத்தை அநுசரிக்கின்றனரோ அவர் மறந்தும் தீயசொற்களைச் சொல்லார்; அன்றிச் சற்கருமங்களையே செய்வர்.

ஒழுக்கத்தைப்பற்றிச் சாஸ்திரங்களில் எவ்வளவு சொல்லியிருந்தாலும் காலதேச வர்த்தமானங்களை யறிந்தொழுகவேண்டும். அஃதாவது: தருமநூல்களிற் சொல்லப்பட்ட ஒழுக்கங்களில் இக்காலத்துக்கு ஏற்கத்தக்க வற்றை கொண்டும், ஏற்கத்தகாதவற்றைவிட்டும், சொல்லாதவற்றில் ஏற்பனகொண்டும் ஒழுகுதலாம். அவ்வாறே இக்காலத்தில் அநேக ஆசாரங்களை அநுசரித்தும் வருகின்றோம். ஓலையில் எழுதுவதும்வாசிப்பதும் முற்காலத்தில் வழக்கமாயிருந்தது; இப்போது அதுமாறிக் காகிதத்தில் எழுதுவதும் படிப்பதும் வழக்கமாய் அதுவே ஆசாரமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. விஷ்ணு ஆலய சிவாலயங்களில் குளோபுகளில் விளக்கேற்றும் வழக்கம் நவீனமாய் ஏற்பட்டு அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வாறே அநேக ஆசாரங்கள் மாறிவந்தும் அவற்றைப் பெரியோர் இகழாமல் அங்கீகரித் திருக்கின்றனர். கால தேச வர்த்தமான

ங்களை அறிந்து போகாமற்போனால்,நமது சாஸ்திங்களில் கூறிய யாதொரு ஒழுக்கமும் முறைப்படி அநுசரிக்கப் படாமற்போம்; முற்றுமே முறைப்படி அனுசரிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தினால், அது நம்மவர் நல்லொழுக்கத்தைக்கைக்கொள்வதா லுண்டாகும் கஷ்டத்திற் கஞ்சி மனம் போல் நடக்க இடந் தரும்; மேலும்,ஒழுக்கத்தை ஏற்பதும் விடுவதும் நமதிஷ்டமன்று; அதி கல்வி அறிவு ஒழுக்கங்களுள்ள பலபெரியோரும் ஒப்பத்தக்கதா யிருக்கவேண்டும். மேற்சொல்லிய புற ஒழுக்கங்களில் கால பேதத்தால் சிறிது வழுவி யிருந்தாலும் சத்தியம், தயை, பொறுமை, தேவதாபத்தி, பொருமை யில்லாமை, உலோபத்துவ மில்லாமை ஆகிய இக்குணங்கள் அவசியம் இருக்கவேண்டும். புற ஒழுக்கங்கள் குறைவற இருந்தும் ஷை சத்தியம் முதலிய அகக் குணங்க ளில்லை யாயின் மேன்மை யடைவது முடியாது. சுத்தநீரில் ஸ்நானஞ்செய்தல் முதலியன ஸ்தூலமும் சரீரத்தைப் பற்றியதும் புறவொழுக்கமுமாம்; சத்திய முதலியன சூட்சுமமும் ஆன்மாவைப் பற்றியதும் அகவொழுக்கமுமாம். சத்தியமாவது பிறர்க்குத் துன்பமுண்டாகா திருக்கும்படி பொய்ம்மையை யொழித்து மெய்ம்மையை உரைத்தல்; தயையென்பது பிறருக் குண்டான துன்பம் தனக்கு நேர்ந்தது போல மனந் தபித்து அதனை நீக்க முயலுதல்; பொறுமையாவது தன் விஷயமாய்ப் பிறர் செய்த குற்றத்திற் காகக் கோபங்கொள்ளா திருத்தல்; தேவதாபத்தி யென்பது கடவுளிடத்தும் ஞானிக ளிடத்தும் கவுரவசிந்தை யோடு அன்பாயிருத்தல்; பொருமை யின்மை லோபமின்மை இவை விளங்கி நின்றன.

சம்பாஷணைக்குறிப்புகள்.

ஒருவருக்கொருவர் நம்முடைய மனதிலிருக்கும் எண்ணங்களை மாற்றிக்கொள்வதற்கும் நம்மனதில் துக்கமும் வியஸனமும் இருக்குமாயின் அவைகளை இன்னொருவரிடம்சொல்லிக்கொள்வதற்கும், இவைபோன்ற பிறவற்றிற்கும் நாம்நற்குண நற்செய்கைகளுடைய சிநேகிதர்களை யடைந்து அவர்களுடன் ஸம்பாஷித்தல் நலமாம்; சம்பாஷணை செய்வதால் நமக்குப் பலவித அனுகூலங்கள் உண்டாகின்றன. எப்பொழுதெனின்,நல்லஸஹவாஸமுள்ள சங்கத்தில் சேர்ந்து அங்கு நல்ல விஷயத்தைக்குறித்து ஒருவர்க்கொருவர் ஸம்வாதப்ரேரிடின் அப்பொழுதுதான் சம்பாஷணையின் உண்மையான உதவிகள் வெளிப்படும்.பின் குறிக்கப்படும் சிலகுறிப்புக்கள் சம்பாஷணைக் காலத்தில் கவனிக்கத்தக்கன.

1. நீ சார்ந்திருக்கும் சங்கத்தின் காலத்தினையும், உன்னுடைய அருமையான காலத்தையும், வீண்விஷயங்களைக்குறித்து அதிக நேரம் பேசி வீணாக்காதே.

2. ஒரு சங்கத்தில் ஏதாவதொரு விஷயத்தைப்பற்றிச் சம்பாஷணை நடந்துகொண்டிருந்தால் நீ நடுவில் ஏதாவதொன்றைக் கடுமையாய்க் கூறாதே; ஏதாவது உபயோகமற்ற விஷயங்களைப்பற்றிப் பேச்சுக்கள் நடந்தாலுங்கூட யாவர்மனதிலும் படும்படி ஒருவிதமான கெட்டவார்த்தையையுங்கூறாதே. உனக்குக் கஷ்டமாயிருந்தால் அச்சம்பாஷணை முடியும்வரை பொறுமையாய் ஸஹித்திருந்து பிறகு அச்சங்கத்தைவிட்டுவிடு. எப்பொழுதும் சம்பாஷணை நடந்து கொண்டிருக்கும் பொழுது நடுவில் எழுந்து வராதே.

3. நீ எப்படி நல்ல புஸ்தகத்தைப்பொறுக்கியெடுக்கிறாயோ அப்படியே உன்சம்பாஷணைக்கும் நல்ல ஸஹவாஸமுள்ள சிநேகிதர்களைக்கண்டுபிடி. நல்லபுஸ்தகங்களும் சற்குணமுள்ள சங்கமும் உன்னை விருத்திசெய்வனவாம். உன்னுடன் சம்பாஷிக்கும் நண்பர்களிடமிருந்து நீ எதையாவது கற்றுக்கொள்ளவேண்டும்; அல்லது அவர்களாவது உன்னிடமிருந்து கற்றுக்கொள்ளல் வேண்டும். இவையிரண்டும் முடியாமற் போனால் அச்சங்கத்தை அடியோடு விட்டுவிடு.

4. நீ சேரும் கூட்டத்தின் தன்மையையும் குணத்தையும் சரிவரக் கற்றுக்கொள். அவர்கள் உன்னைவிட உயர்ந்தவர்களாயிருப்பின் அவர்களிடம் உனக்குத் தெரியாதவைகளைக் கேட்டு உன்சந்தேகங்களைத் தீர்த்துக்கொள். அவர்கள் உன்னிலும் தாழ்ந்தவராயிருப்பின் அவர்களுக்கு நல்விஷயங்களைப் போதித்து அவர்களை நல்லவர்களாக்க முற்படு.

5. சம்பாஷணை நடக்குங்கால், புதிய, அருமையான, அறிவூட்டத்தக்க விஷயங்கள் சொல்லப்பட்டால் அவைகளை உன் “ஞாபகக் குறிப்பு”ப் புஸ்தகத்தில் எழுதிக்கொள். உபயோகமுள்ள விஷயங்களை ஏற்றுக்கொண்டு, சாரமற்றவைகளைத் தள்ளிவிடு.

6. சம்பாஷணைச் சங்கத்தில் நீ ஒன்றும் சொல்லாமலிருக்காதே. உன் வாக்சாதுர்யத்தாலும் நீ கூறும் உபயோகமுள்ள விஷயங்களாலும் உன் சிநேகிதர்களைச் சந்தோஷிக்கச் செய்;

உன் வாயைத்திறவாமல் சும்மாவிருப்பது நல்லநடக்கையன்று. மேலும், அது ஒழுக்கமின்மையைத் தெரிவிக்கும்.

7. நீ சொல்லும் விஷயம் நிரூபிக்கமுடியுமானதோ, அல்லதோ, உண்மையோ, பொய்யோ அதை உண்மையென்று நிர்த்தாரணம் செய்ய, பெருங் கூச்சலிடாதே. மேலும் அதையாவரும் நம்பும்படி கட்டாயப்படுத்தாதே. அதைக்குறித்து அவர்கள்திர யோசித்துப் பின்பு ஒரு முடிவுக்குவந்தபிறகுஉன்தீர்மானத்தைச்சொல்.

8. ஒரு கூட்டத்தில் அஹஸ்மாத்தாகவோ அல்லதுதெரியாமையாலோ யாராவது ஒருவர் பேச்சில் தப்புச்செய்து விட்டால் அதை அச்சங்கத்திலேயே நீ திருத்த முயலாதே; ஏனெனின், அது மரியாதையன்று. மேலும்தப்புச்செய்கிறவன் பரிகாஸம்செய்யப்படுவான். ஆகையால் சங்கம் கலைந்தபிறகு, அவனைத் தனியாய்க் கூப்பிட்டு அவன்செய்த தப்பிதத்தைச் சொல்லி அவனைத் திருத்து.

9. தேவதூஷணம் செய்வதும், அவதூறுசொல்லுவதுமான சங்கத்தை மரியாதையாய் விட்டுவிடு. கூடுமானல் உன் நற்போதத்தினல் அதைத் திருத்தப்பார்; முடியாவிட்டால் அதை விட்டுவிடு; அதைவிட்டு நீங்குகின்ற சமயத்தில் அச் சிநேகிதர்களுடன் சச்சரவிடாமல் மரியாதையாய் விட்டு நீங்கு.

10. சம்பாஷணைச்சங்கத்தில் நீ சாவதானமாய்ச் சொல்வனவற்றைக்கேட்டுச் சந்தோஷப்படு. ஏதாவதொன்று உனக்குஅவமதிப்பானது என்று தோன்றினல் அதைப் பொறுமையுடன் ஸஹித்துக்கொள்; ஏனெனின், நீ எதை அவமதிப்பானது என்று நினைக்கின்றாயோ அது பலருக்கும் அங்ஙனமாகத்தோற்றாது என்பதை உணர். எப்பொழுதும் நீ கோபித்துக்கொள்ளாதே; ஏனெனின் நீ கோபித்துக்கொள்ளத்தக்க இடம் அதுவன்று.

"ஸ்வதேச நண்பன்."

உறுதி மொழிகள்.

சினமதொழிந்தால் மனமது சாந்தியாம்.
ஆண்மை யென்ப தறநெறி நிற்றல்.
வேந்தனைப் பகைப்பார் வேருடன் கெ[illegible]
நல்லொழுக்க மில்லான் நாசமடைவா[illegible]
கணிதமு *மளவையுங் கல்லார் குருட[illegible]

* அளவை-[illegible]

ஸ்நுஷா விஜயம்.

(ஓர் இனிய நாடகம்.)

முதல் அங்கம்.

நாடக பாத்திரங்கள்.

துராசை:—துராசையென்னும் பெயர்கொண்ட மாமி.

ஸுசீலன்:—துராசையின் நாயகன்.

ஸுகுணன்:—துராசையின் குமாரன்.

ஸச்சரிதை:—ஸுகுணன் மனைவி, அல்லது துராசையின் மருமகள்-

துர்லலிதை:—துராசையின் பெண்.

சாருவிருத்தை:—துராசையின் தோழி.

மங்களம்.

எந்த லட்சுமியானவள் இவ்வுலகில் மாமிக்கு மருமகளின்பிரியஜனங்களிடத்தில்துவேஷத்தாலுண்டான அபகீர்த்தியைப் போக்கடிப்பவள்போல தன்னைச் சேர்ந்த மருமகளான ஸரஸ்வதியின் பிரிய பாத்திரங்களான வித்துவான்களின் முக கமலத்தில் வாஸஞ்செய்கிருளோ, அந்த லட்சுமியானவள் உங்களுக்கு மங்களத்தை விஸ்தரிக்கட்டும்.

(நாந்தியின் முடிவில்)

ஸூத்திரதாரன்:—(முன்னே பார்த்து) இவ்விடத்திலோ இந்தப் பரிஷத்தானது திருவாங்கூரில் ஸ்ரீமானான ஆதிசேஷனில் பள்ளிகொண்டவராயும், பக்ஷிராஜனை கருடனை வாஹனமாக உடையவராயுமுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஸேவையில் உத்ஸாகமுள்ளது. இந்த ஸபையை, பகவானான பரதமுனி சிரேஷ்டர் தெரிந்துகொண்ட முதல் வித்தையாகிய நாட்டியத்தால் கொண்டாடுவோம்.

(திரைக்கு எதிர்முகமாகப் பார்த்து).

மித்திரா! மாரிஷா! இங்கேவா.

(பாரிபார்சுவகன் பிரவேசிக்கிறன்.)

இதோ இருக்கிறேன்.

ஸூத்திரதாரன்:—மித்திரா! இலத்தூரென்று பிரசித்தமான அக்கிரஹாரத்தில் வஸிக்கும் வரதராஜகுமாரனை ஸுந்தரராஜனால் செய்யப்பட்டதும் நம்மால் அப்பியஸிக்கப்பட்டதுமான ஸ்நுஷாவிஜயம் என்னும்பேருள்ள நாடகத்தால், இது ஸாரம் இது அஸாரம் என்று அறிவதில் ஸமர்த்தரான இந்தவித்துவான்களின் கூட்டத்தை ஆராதிக்க இச்சிக்கிறேன். இப்பொழுதோவென்றால் ஸமுத்திரத்தை ஒட்டியாணமாக உடைய ஸாத்வீயான பூமியானது தன் சரீரத்தினின்றும் உண்டான மாமரத்திற்கு வஸந்த லக்ஷ்மீயுடன் சேர்க்கையைப்பார்த்து மிகவும் ஸந்தோஷத்தை அடைகிறது.

பாரிபார்சுவகன்:—மித்திரா! தன்னிடத்தினின்றும் (பூமியினின்றும்) உண்டான சூதவிருக்ஷத்திற்கு வஸந்தலட்சுமியாகிய மனைவியின் சேர்க்கை

யில் ஸந்தோஷமென்பது அந்தப் பூமிக்கு எப்படி யேற்பட்டது? மிக ஆச்சரியம்!

ஸூத்திரதாரன்:—மித்திரா! இஃதென்ன ஆச்சரியம்! நற்குணமமைந்த மனைவியோடு புத்திரனுக்குள்ள சேர்க்கையைக் கண்டு கெட்ட புத்தியுள்ள ஸ்திரீகள் ஸகிப்பதில்லை; நல்ல ஸ்திரீகள் அப்படியல்ல.

பாரிபார்சுவகன்:—வாஸ்தவத்தைச் சொல்லுகிறாய்; கெட்டகுணமுடையவளாயிருக்கின்றமையால் இது துராசையின் காரியமே யொழிய வேறல்ல. நல்ல சுபாவமுள்ளவளா யிருந்தபோதிலும் மருமகளிடத்தில் ஆசையில்லாதிருப்பதின் காரணம் யாதோ?

(நினைக்கிறான்)

அடே! அடே! கெட்டவனே! என்னுடைய கெட்ட குணத்தினால் மருமகளிடத்தில் எனக்கு ஆசையில்லையென்று எப்படிச் சொல்லுகிறாய்.

ஸூத்திரதாரன்:—மித்திரா! என்வார்த்தையால் துராசையென்னும் பதம் தன் பெயராயிருப்பதை ஆசங்கித்துக்கொண்டு, துராசையென்ற பெயருள்ள மாமியானவள் கோபித்துக்கொண்டு, இந்த இடத்திலேயே திரும்புகிறாள். ஆகலால் ஆரம்பித்த காரியத்தை நிறைவேற்றுவதின் பொருட்டுப் போவோம்.

(போகிறார்கள்)

பிரஸ்தாவனை முற்றிற்று.

—o:o:o—

துராசை பிரவேசிக்கிறாள்.

துராசை:—(அடே அடே! கெட்டபயலே! என்று மறுபடியும் படித்துவிட்டுக்) கஷ்டம்!

கெட்ட வியாபாரமுடைய மருமகளைக் காரணமாக உடையது இந்த என் தூஷணம்.

(நினைக்கிறாள்.)

அடி!, கெட்டவளே! உன் கெட்ட வியாபாரத்தை அறியாதவளாயிருந்துகொண்டு நல்லகுணமுள்ள மருமகளிடத்தில் நீ எவ்வாறு அதை * ஆரோபணம் செய்கிறாய்?

துராசை:—(முன்னே பார்த்து) கஷ்டம்! என்வார்த்தையைக்கேட்டுக் கோபித்த நாயகன் இங்கேயேவருகிறான்.

ஸுசீலன் பிரவேசிக்கிறன்.

ஸுசீலன்:—துஷ்டே! உன்னால்—இனிமேல் நீ மருமகளுக்குக் கீழ்ப்படிந்தவளாக விருக்கவேண்டும்.

* ஆரோபணமென்றால் இல்லாத தோஷங்களை உள்ளதாகக் கூறுவது.

தாராசை:—ஆரியபுத்திர! உமக்கே கீழ்ப்படியாத நான் எப்படி எங்கேயோ கிடந்தவளுக்குக் கீழ்ப்படிந்தவளாக இருப்பேன்?

ஸுசீலன்:—ஏ துஷ்டே! என்ன சொன்னாய்? "எனக்கு வேதங்களும் அவற்றின் அங்கங்களும், ராஜஸபையும், கீழ்ப்படிந்திருக்கும்பொழுது நீ ஏன் கீழ்ப்படியவில்லை?

தாராசை:—ஆரியபுத்திர! உமக்குக் கீழ்ப்படிந்திருப்பது மஹா பிரயாஸம். வெளி வீட்டிலிருந்து வந்த ஒருஸ்திரீக்கு ஒருபொழுதும் கீழ்ப்படிந்திருக்க மாட்டேன்.

ஸுசீலன்:—ஒன்றும் தெரியாதவளே! கேள்! புத்திரன் ஸமர்த்தனாயும், மருமகள் ஸமர்த்தையாயும் இருப்பார்களேயானால், குடும்பம் நன்கு பரிபாலிக்கப்படுமாகையால், விருத்தர்களான தாய்தந்தையர்கள் அப்படிப்பட்ட அவர்களுக்குக் கீழ்ப்படிந்தே இருக்கவேண்டும்.

தாராசை:—ஆச்சரியம்! எங்கேயோ இருந்து கொண்டுவரப்பட்ட ஒருத்திக்கு நீர் கீழ்ப்படிந்தவராக இரும். நான் வெகுகாலமாக கிருஹத்திற்கு எஜமானியாக இருந்து எப்படி இப்பொழுது வந்தவளுக்குக் கீழ்ப்படிந்தவளாக இருப்பேன்?

ஸுசீலன்:—புத்தியுள்ளவனையும், பாடசாலையிற்படிப்பவனையும், கலியாணஞ்செய்யப்படாதவனையுமிருக்க, உன்பிள்ளையையும், கலியாணமான பக்கத்துவீட்டுப் பிள்ளையையும் பார்த்து முன் நீ என்னிடம் மருமகளை ஸம்பாதிப்பதன் பொருட்டுச் செய்த உபத்திரவம் கொஞ்சமா? எவ்வளவு காலமாகக் குழந்தை பிரமசரிய விரதத்தை முடிக்காமலிருக்கிறான்; அவன் எப்போது கல்யாணம் செய்துகொள்வது? அடுத்த வீடு எதிர் வீடுகளிலுள்ள எனக்கு ஸமானமானவர்கள் பிள்ளையுடன் வாஹனத்தில் ஏறிக்கொண்டு, அடிக்கடி ஸம்பந்தி ஊருக்குச்செல்கின்றார்கள்; குழந்தையுடன் கூடச்செல்லும் அவர்களை ஸம்பந்திகள் பரபரப்புடன் எதிர்கொண்டழைத்து நடுவீட்டில் உட்காரவைத்து, வந்தன பூர்வகமாக சந்தனம் விலாமிச்சம் புல்லால் சீதளமாக்கப்பட்ட தீர்த்தம், மல்லிகை, ஹாரம், தாம்பூலம் முதலிய காணிக்கைகளை அர்ப்பணஞ்செய்து கொண்டாடுகின்றனர். தந்தை வீட்டிலிருந்து வாஹனத்தில் வந்து இறங்கி வெட்கத்துடன் பூமியில் நமஸ்கரிக்கும் யுவதியான மருமகளை ஸந்தோஷத்துடன் சீக்கிரமாக மடியில் தூக்கி வைத்துக்கொண்டு புண்ணியம் செய்த ஸ்திரீகள் ஆலிங்கனஞ் செய்து கொள்ளுகிறார்கள்; நாமெங்கேபோவது, என்று கூறினையல்லவா?

தாராசை:—நாத! வாஸ்தவத்தைச் சொல்லுகிறீர்; அப்பொழுது அப்படிப்பட்ட வியாபாரம் ஹ்ருதயத்தில் ஸாரமாக விளங்கிற்று. கஷ்டம்! இப்பொழுதோ வென்றால் மருமகள் என்னும் வார்த்தை எனக்கு விஷம் போலிருக்கிறது!

(தொடரும்.)

M. நாராயணசாமி அய்யர்.

உழவு.

ஸூர்யன் கிழக்கே யுதித்தது முதல் மேரு மலையை யடையும் வரையில் கலப்பை பிடிக்கும் உழவன், தான் செய்யுங் காரியம் எதுவரை பலனளிக்கும்? எதற்காகச் செய்கிறோம்? என்றத் தொடக்கத் தனவாகிய விஷயங்களைச்சிறிதேனும் கவனியாது உழுகின்றதன் தாத்பர்யம் யாதோ எனின், தக்க ஸமயத்தில் ஏருழுது, காய்க்கும் சமயத்தில் அரிவாளைக் கைக்கொண்டு, மாதுளைப் பழத்தின் உட்சிவந்த விரைபோன்று கிடக்கும் மணிக்கதிரைச் செவ்வனே யறுத்து, கதிரடித்து, நெல்லைப் பையிற்கொண்டு, தனது வீடுசென்று, நெற்குத்தித் தன்னுடன் கஷ்டப்பட்ட வேலையாளர்க்குந் தக்க சம்பாவனை தந்து தானும் வயிறார உண்டு களித்தற் பொருட்டேயாம். "உண்பாரைப் பார்த்தாலும் உழுவாரைப் பார்க்கலாகாது" என்ற பழமொழியைப் பெரியார் தங்கட்கே திருவாய் மலர்ந்ததாகக் கொண்டு ஜனங்கள் உழுபவனிடம் அதிக நடமாட்டம்வைத்துக்கொள்ளாததாலும், உழவன் நாள்முழுதும் உழுவதிலேயே தன்காலத்தைக் கழித்து விடுவதினாலும், சூது, வாது, பொய், வஞ்சகம், திருட்டு, மோசம், லோபத்தன்மை, நயவஞ்சகம் முதலிய தீக்குணங்கள் அவனிடத்து ஈடுபடுவதேயில்லை என்பது உலகம் அறிந்த விஷயமாம்.

"சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா லுழந்து முழவே தலை" என்று நூலாசிரியர் பலரினும் சீரிய மகான் கூறியதைநாம் சற்றே சீர்தூக்கி உற்று உணர்ந்து பார்ப்போமாயின், உழுபவர்தன்மை இன்னனமாகுமென்பது தெற்றெனப்புலப்படுவதாம். அவர்தம் மனத்திட்பப்படி மேற்கூறிய ஈரடிகளின் பொருளை விளக்கப் போந்தவிடத்து, உலகமுழுமையும் ஏருடையார் வழி ஆயிற்று; ஆகலின் தலைமையான தொழில் உழவேயாம் என்பது நன்கு அறியக்கிடக்கின்றதன்றோ? பல உழவர்சேர்ந்து, தம்முடைய தேசம் நல்லஸ்திதிக்கு வரவேண்டும் என்ற அவாமிக்குடையராய் ஏரைப் பிடித்துப் பன்னிப் பன்னியுழுது அழகிய கதிர்களை யறுத்து, ஏனைய மக்கட்கு உதவாவிடின், உலகம் உய்வது எங்ஙனம்? கதிர்கள், நெல் தான் என நினைத்தல் சரியன்று. நம் தென் இந்தியா

விலும் பர்மாவிலுமே நெல் பயிராக்கப் படுகின்றது என்பதை யாவரும் உணர்தல் ஆவசியகமாம்.

மிகவும் கனத்ததாகிய தேர் ஒன்றிற்கு அதனடியில் இருக்கும் அச்சு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்விதமே எண்சாண்உடம்பிற்கும் உணவுஇன்றியமையாதது என்பதை யறியாதவர் சொற்பரேயாவர். * "அன்னத் தேவர் மட்டானால் எல்லாத் தேவரும் சட்டாவார்" என்பது சாதாரண வாக்கியம், உணவு இல்லாவிடின், இரத்தப்பெருக்கு இல்லையாம். இரத்தப் பெருக்கு இன்றேல் நடப்பதற்கும், பேசுவதற்கும், கேட்பதற்கும், மற்று எவ்விதக் காரியசித்திபெறுவதற்கும் இயலா என்பது யாவரும் அறிந்த விஷயமாம். அவ்வுணவு உழவனாலேயே கிடைக்கின்றதாகவின், அவனே உயரிய பீடத்தில் வைக்கப் பாத்திரனானவன். சுருக்கிச்சொல்லப் போந்தவிடத்து, உழுபவர் உலகத்தார் ஆகிய தேர்க்கு அச்சாணி ஆவர் என்பது நன்கு அறியக்கிடப்பதாம். இக்கருத்தை விளக்கித் தான்

"உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்று, தெழுவாரை யெல்லாம் பொறுத்து" என்று மாதாநுபங்கி திருவாய் மலர்ந்தார் போலும்!

இவ்வுலகத்தில் மனுஷ்யராய்ப் பிறந்ததன் நோக்கம் என்னை? "பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர், தொகுத்த வற்றுளெல்லாந் தலை" என்ற பெரியார் வாக்கியத்தை மேற்கொண்டு பிறர்க்குபகாரஞ்செய்து தானும் உண்டு நற்கீர்த்தியை யடைவதுவே மேலானதாம். தனக்குத்தனக்கு என உழைப்பது உழைப்பாமோ? ஜனசமூகத்தின் அபிப்பிராயங்களை யறிந்து அவர்களுக்கு உபகரிப்பதுவே ஒருவன் எடுத்தபிறவிக்கு இயல்பானதாம். மனமொழி மெய்களால் உள்ளபடி தன் தேசத்தை விரும்பும் தேசாபிமானியொருவனுக்கு நிகழும் கஷ்டநிஷ்டூரங்களை நோக்கும் நமக்குமனம் இளகாதிராது. அவர்கள் கடமைப்பட்டவிதமே நாமும் கடமைப்பட்டிருக் கின்றோம். இக்கடமையைப் பள்ளியிலும் மற்றுவேறு இடங்களிலும்போதிக்கவேண்டிய நாமே வாளாயிருக்கக், கற்றுத் தெளியாத உழவன் உலகார்த்தமாகத் தன்வாணாளைக் கழிப்பதால், நம்மைக் காட்டிலும் அவ்வுழவன் உயர்ந்தவ

* எல்லாத் தேவர்:பஞ்சபூதங்கள், பைசாசம் முதலிய எவையுமாம்.

னன்றோ? அங்ஙனம் உயர்வுத்தன்மை யடைதற்குக்காரணம் அவன்றன் தொழிலையாம். அவ்வுழவுத்தொழிலைக் கைக்கொண்டு பிறவுயிரோம்புதலே தலையான தர்மமாம்; அஃதாவது "உழுதுண்டு வாழ்வாரேவாழ்வார், மற்றெல்லாந்தொழுதுண்டு பின்செல்பவர்."

(பின்னும் வரும்)
S. V. விவேகாநந்தம்.

நெப்போலியனின் அபாரசக்தி.

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரெஞ்சுக்காரர்களின் அதிவீரதீர சேனாபதியும் இங்கிலீஷ்காரரின் சத்துருவுமாயிருந்தநெப்போலியன்என்பார் மஹா அபாரசக்தியுடையவரா யிருந்தார். நெப்போலியன் என்னும்பேரைக்கேட்டாலுங்கூட ஐரோப்பா முழுவதிலும் அழுகிற குழந்தையும் வாயைமூடும். இராஜாக்கள் எல்லாம் நெப்போலியனைக் கண்டு பயந்தொளிந்தனர். இங்கிலீஷ்காரர்கள் நெப்போலியனைக் கைப்பற்றப் பலவிதத்திலும் முயன்றனர். நெப்போலியனது சேனாபாக்கிரமும் தேஹவலிமையும் மஹாதீரமும் ஒருபுறமிருக்கட்டும்; அவருடைய விடாமுயற்சியும், அற்பகாரியங்களையும் கூடத் தாமே சிரமத்துடன் செய்யும் ஆற்றலும் பாராட்டற்பாலன வென்று ஸ்மைல்ஸ் என்பவர் தம் "தன்முயற்சி" என்னும் நூலில் கூறியுள்ளார். அவைகளை இங்குக் கொஞ்சம் எழுதுகின்றேன்.

நெப்போலியன் ஒவ்வொரு காரியத்தையும் தாமே செய்வார். அமர்க்களத்தில் தாம் ஸேனாதிபதியாயிருக்கத் தம்முடைய சேனைகள் இங்கிலீஷ் பிரஷ்யர்களுடன் அதி கோரமாய்ச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் பொழுது நெப்போலியன் சேனாபதித் தொழிலை நேர்மையாய் வஹித்திருப்பதுடன், "குதிரைகள் பலான இடங்களில்மலிவாய்க்கிடைக்கும்அங்குப்போய் வாங்கிவாருங்கள்" என்று சிலரை அங்கு அனுப்புவார்; குதிரைஜீனிகள் சரியாயிருக்கின்றனவா என்றும், ஸோல்ஜர்களுக்கு "பூட்ஸுகள்" புதிதாய்த் தைக்கும் படிக்கும், தம்முடைய தங்குமிடத்திற்குச் சாராயம் கொண்டுவரும்படிக்கும், சேனைகளுக்குப் பிஸ்கோத்தும் உணவும் தயார் செய்யும் படிக்கும் ஏற்பாடுசெய்வார். அதே ஸமயத்தில்

தம் சொந்த ஊராகிய பாரிஸில் இருக்கும் "ப்ரெஞ்ச் காலேஜைச் சரியானபடி நடத்தவும், பொதுக்கல்வி அபிவிர்த்தியாகக் கூடிய வழிகளை எழுதியும் அனுப்புவார். அதேசமயத்தில் "மானிடியார்" என்றபத்திரிகைக்கு வரவுசெலவைப்பற்றியும், ராஜதந்திரத்தைப் பற்றியும் வியாஸங்கள் எழுதியனுப்புவார்; மேலும் பொதுவர்த்தமானங்களையும் எழுதுவார்; இதன் மத்தியில் வீட்டுக்காரியங்களையும் கவனிப்பார். இவருக்குத் தம்தாயினிடத்தில் அத்யந்த பிரீதியுண்டு. ஆகவே, தமது தாய்க்கு அங்குநடக்கும் விஷயங்களை எழுதுவார்.

இவைகளைப்போல் பலகாரியங்களை விடாமுயற்சியுடனும் சோம்பலில்லாமலும் ஊக்கத்துடன் செய்வார். அவர் சில சமயங்களில் 100, 120 மைல் கூடக் குதிரைமீது ஒரே மூச்சாய்ச்சவாரி செய்திருக்கிறார். ஒருமனிதன் முன்னுக்குவரவேண்டுமானால் அவனிடத்து விடாமுயற்சியும் ஊக்கமும் இருத்தல் அவசியம். அதற்கு நாம் நெப்போலியனை மாதிரியாகவைத்துக் கொள்வோம். அவரைப்போல் வேலைசெய்ய நம்மால் இயலாமற்போனாலும், அதில் பத்தில் ஒருபங்காகிலும் கஷ்டப்படுவோமே. அப்பொழுது அதற்குத் தகுந்த பலனுண்டாகும். "நன்மைகடைப்பிடி" என்னும் மூதுரையைக்கடைப்பிடித்தொழுகுகின்றவர் பலனடையாமற்போகார்.

ஸ்வதேசநண்பன்.

பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி).

அப்பொழுது ஜமீன்தார் மாதுலராகிய அருளானந்த முதலியாரை அழைத்துக் கொண்டுவந்து சிசுபாலனுக்கு அறிமுகப்படுத்தி விட்டுச்செல்லக், கிழவரும் அவனுடன் சிறிதுநேரம்வார்த்தையாடிக் கொண்டிருந்து தமது அறைக்குச்சென்றுவிட்டனர். சிசுபாலன் அம்மா! தாங்கள் எப்பொழுதாவது வண்ணமாபுரியில் வசித்ததுண்டாவென்று கேட்டனன். இதற்கு அரைமணிநேரத்துக்கு முந்தியே இவன் இப்படியான கேள்வியைக் கேட்பான், அதற்கு நாம் இப்படிச் சொல்லுதல் வேண்டுமென ஆலோசித்திருந்தபடியே யாதொரு தடையுமின்றி ஆமென்று கூறினாள்.

அவன் அம்மா! விவாகத்தைப்பற்றிக்கூறிய வர்த்தமானப் பத்திரிகையில் தங்கள் தந்தைபாரது பெயரைக் கண்டவுடனேயே நான் அறிந்தபெயராகத் தோற்றினது மல்லாமல் தங்கள்தந்தையாரை அங்குப் பலமுறையும்கண்டஞாபகமும் தோற்றியது. ஏனெனில் நானும் எனது சகோதரன் அருட்பிரகாசமும் கலாசாலையைவிட்டு மூன்றுவருடமாய்விட்டது. கல்விகற்கும் அந்நாள் நான் ஊதாரித்தனமாய் விளையாட்டிற் பொழுது போக்கினேன். அருட்பிரகாசமோ படிப்பிற் கவனமாக விருந்தான். அவனுக்குக் கலாசாலையை விட்டுப்பிரிவதுமிகவும் துக்கமாக இருந்தது. நான் இப்படிக் கூறியதினால்அம்மா! தாங்கள் என்னைக் கெட்டவனாக எண்ணல்வேண்டாம் என்றனன். அப்பொழுது அத்தை மங்களம் தலைவிரிகோலமாகப் புலம்பிக்கொண்டு அங்குவந்து பூங்காவனத்துக்கு ஏதோ கூறுதலும் அவள் அலறிக்கொண்டு தான் இருந்த அறைக்குநேரே வடபுறமாகவுள்ள ஐந்தாவது அறைக்குள் ஓடினாள்.

நான்காம் அதிகாரம் முற்றிற்று.

ஐந்தாம் அதிகாரம்.

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

இவ்வுலகவாழ்வானது கானற்சலம்போல நிலையற்றதென்பது எவர்களும் மறுக்கொணா வுண்மையாகும். கணநேரத்துள் பேரானந்தமானது துக்கமாக மாறிவிட்டது. ஆடல்பாடல் விருந்துக் கொண்டாட்டம் காகிதவிளையாட்டு முதலியவைகளினாலும் நிறைந்து பேரொளியுடன் விளங்கிய சுவர்ணமாளிகையானது சக்கரவாளகிரிபோன்ற இருட்படலத்தால் மறைக்கப்பட்ட இருட்பூமிபோலத் துக்கம் சோகம் அழுகை முதலியவைகளால் நிரம்பி விட்டது. பைசாசங்களும் நாய்களும் கண்துயிலும் அர்த்தயாமமாயிற்று. அவ்வமயம் சந்திரன், தன்பேரழகைக் கண்டு மகிழும் ஓர் ஆடம்பரமான பெண்போன்றிருந்தனன். அப்பெண்மணி தடபுடலில் தன் ஓர்ப்பாடிச் சிறுவனின் துன்பத்தைக் கவனிக்காது எவ்வாறிருப்பாளோ அவ்வாறே சோமனும் காணப்பட்டான். கீழே மாடியின்மேல் திறந்திருக்கும் சாளரவாயிலினால் நன்றாக நிலாக் காய்ந்திருந்த இடத்தில் அலங்காரமான ஒரு கட்டில்வைக்கப்பட்டிருந்தது; அதன்மேல் இரண்டு மூன்று மெத்தைகளும்

அநேக மிருதுவான தலையணைகளும் போடப்பட்டிருந்தன. இவ்வளவு நன்றாக இவைகள் அமைக்கப்பட்டிருந்தும், அதிற் புரண்டு வருந்திய அருளானந்த முதலியாருக்கு ஒருசுகமுமேற்படவில்லை. பூங்காவனம் கட்டிலுக்கருகில்நின்று தன் பிதாவின்கையைமுத்தமிட்டு அழுதாள். முதலியார் சிறிது நேரம் நோயினால் வருந்திப் பின் ஆறுதலடைந்துபடர்ந்து செல்லும் அழகியமேகபடலங்களைப் பார்த்து மனவாறுதலடையும்படி கட்டிலைச் சாளரத்துப் பக்கத்தே வைக்குமாறு தமது குமாரியைக் கேட்டுக் கொண்டார். அங்ஙனம் செய்தபின் அந்தியகாலத்தில் ஓதவேண்டிய அருட்பாக்களைப் பாராயணம் பண்ணியதேயல்லாமல் குமாரியையும் பாடும்படி கேட்டுக் கொண்டார். அங்ஙனமே ததும்பி நிரம்பிய கண்ணீருடன் ஆன்ம ஈடேற்றத்துக்குரிய சில அருட்பாக்களை ஓத முதலியார் சிவத்தியானத்திலிருந்தார். ஜமீன்தாரும் பக்கத்தில் நின்றுகொண்டு ஞாபகிக்குத்தேறுதல் வார்த்தைகளைக் கூறினர். அருளானந்த முதலியார் நெடுநேரம் பேச்சு மூச்சில்லாமற் சயனித் திருப்பதைப் பூங்காவனம் பார்த்து அவர் தூங்குகின்றார் எனநினைத்துக் கொண்டாள். முதலியார் சிறிதுநேரத்துக்குப்பின் குமாரியைக் கூர்ந்து பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டார். அப்பொழுது அருமைக் குமாரி "அப்பா தூங்கினீர்களோ?" என்று அன்பாகக் கேட்டனள். அதற்கு அருளானந்தமுதலியார் "இல்லையம்மா! பரம கருணாநிதியாகிய பரமேஸ்வரனைத் தியானஞ் செய்து கொண்டிருந்தேன்" என்றார். சிறிதுநேரஞ் சென்றபின் எவ்வகையான சிகிச்சையினாலும் நோய் குணப்படாமல் மரணவஸ்தைக்குக் கொண்டுவந்துவிட்டது. பூங்காவனம் தந்தையாரின் யமவாதையையும் அவரது முகத்தில் பிரேதக்களை வந்து கொண்டிருத்தலையும் கண்டாள். "தவச்சிரேஷ்டராகிய மார்க்கண்டேயர் அரிய சிவார்ச்சனைசெய்து அதன் பெறுபேற்றால் சர்வலோக நாயகரை விடாது கட்டிக் கொண்டிருந்தபொழுதும் சண்டனைக் கண்டவுடன் ஒளியிழந்து என்னபாடுபட்டார்? ஒரு மெய்யடியவரை மரணவாதை இப்பாடுபடுத்தி விட்டதே? அவர்சரீரத்தில் விளங்கிய விபூதி ருத்திராக்கங்களிருந்துமென்னை? சிவார்ச்சனையிற் குவித்திருந்த புஷ்பங்களிருந்துமென்னை? செங்கோற்கடவுளின் பாசம்படலும் எவ்வாறாயிற்றென்பது அவரது கண்களால் நன்றாக விளங்கவில்லையா? அருளானந்த முதலியார் இரண்டுமணியளவில் மண்ணுலகவாழ்வை நீத்து விண்ணுலகம் சென்றுவிட்டனர்.

பிணம் பற்றிப் பிற்சென்று பேரின்பம் பாயுங்
குணம்பற்றிக் கோள்கொண்டு மீண்டும்—கணத்துலகப்
பற்றிற் பதிந்து பரமார்த்தந் தேடாத
திற்றேயிம் மாந்த ரியல்பு.

அருளானந்த முதலியாரின் சீவியவோட்டம்நின்றுவிட்டது. அவரது காலடியில் வீழ்ந்து பூங்காவனம் அழுது புலம்பினள். இழவுக்கொண்டாட்டத்துக்கு வந்த ஸ்திரீகளெல்லாரும் முன்னரிறந்த தாய், தந்தை, புத்திரன், புத்திரி, அண்ணன், தங்கை, தம்பி, தமக்கை, மாமன், மாமி, மைத்துனன், அக்காள் கணவன், தங்காள் கணவன் முதலியவர்களைக் குறித்துப் பெருங்குரற்பாய்ச்சி அழுதுபுலம்பினார்களேயன்றி இறந்தவருக்காக அழுதார் ஒருவருமிலர்; ஜமீன்தாருக்குங் கூடக் கண்ணீர்ததும்பியது. பின் உறவினரும் பணியாளர்களும் பிரேதத்துக்குச் செய்யவேண்டிய கிரியைகளெல்லாம் குறைவற முடித்து மயானம் கொண்டு சென்று சிதைமீது வளர்த்தித் தகனித்துவிட்டார்கள். அதன்பின் நடக்கவேண்டியதாகிய சகலகிரியைகளும் ஜமீன்தாரின் ஏராளமான பொருட்செலவில் முடிந்துவிட்டன.

பூங்காவனம் விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் தரிப்பதைவிடுத்துத் துக்கவுடையணிந்தாள். அவள்தந்தையார்மீது வைத்த அன்பும் கருணையும் இத்துணைத்தென்று வாசகர்களே அறிந்துகொள்வார்கள். சிலவாரங்கள் சென்றுவிட்டன. காலஞ்சென்ற அருளானந்த முதலியார் முன்னர் மருமகனது வீட்டுக்கு வரும்பொழுது தமது பொருள் பண்டங்களையெல்லாம் கொண்டுவந்துவிட்டார். ஜமீன்தாருக்கு அவரின் நிலைமை நன்கு தெரியாமையினால் அவருடைய மரணசாதனம் அல்லது எழுத்துக் கிறுக்குகள்இருக்குமென்றெண்ணி, அவர் பாது காப்பாக வைத்திருந்த ஒருமேசையைப்பணியாளர்களைக்கொண்டு அவரிருக்கும் அறைக்குள் எடுத்துக் கொண்டுபோய் வைப்பித்துவிட்டு அதன் திறவுகோலை அவளிடம் கொடுத்துக் கட்டித்தழுவி முத்தமிட்டு அதைத்திறந்து பார்க்கும்படி கூறித்தமது அறைக்குட் சென்று விட்டார். பூங்காவனம் நாயகனுடைய அன்பான செய்கைகளைப்பற்றி மனதில் ஒருவிதமான இரக்கங்கொண்டாளேயன்றி மெய்க்காதல் உண்டாகவில்லை. அவள் அந்த மேசையைக் கண்டவுடனே துக்கத்துடன் அழுது அதைத்திறந்து பார்ப்பது தன்னுடைய கடமை

தானென்று தைரியங் கொண்டு பார்த்தபொழுது காலஞ்சென்ற அன்னையாரின் தலைமயிர்முடிச்சுக் காணப்பட்டது அன்னையார் முன் இவளைப் பிரசவித்த அறையிலே இறந்துவிட்டனள். அவள் தரித்த தலைமயிர் முடிச்சை ஆர்வத்துடனே முத்தமிட்டு மீட்டும் அழுதுவிட்டு அங்கிருந்த ஒருகடிதத்தைக் கண்டு எடுத்துப்பார்த்தாள். இவளுக்கு அக்கடிதத்தைப் பற்றி நன்குதெரியும் அது எது வெனில் தந்தையாருக்கு அருட்பிரகாசம் கப்பற்றுறை முகத்திலிருந்து எழுதியகடிதமாகும்; இவள் அக்கடிதத்தை வந்த அன்றைக்குக் கண்டதேயல்லாமல் இதற்கிடையில் ஒரு நாளும் காணவில்லை. அதுவந்த அந்நாளில்பார்த்த ஞாபகமானது உண்டாகவே தீயினாற் சுட்டவடுப்போல இப்பொழுது வெளிவந்துவிட்டது. தற்போது இரண்டாம் முறையாக அக்கடிதத்தை வாசிக்கவிரும்பியும் ஆனால் அது தனது நாயகருக்கு விரோதமாயிருக்குமென்றெண்ணி விட்டாளாயினும் அருட்பிரகாசத்தின் வடிவத்தையும் முன் அவன்மீது காதல் கொண்டிருந்த எண்ணத்தையும் விடமுடியவில்லை. பூங்காவனம், கடவுள் வழியாகத் தனக்குக்கிடைக்காத செல்வமென்றெண்ணி அக்கடிதத்தைப் போட்டுவிட்டு மீட்டும் ஆராய்ந்து பார்த்தவுடன் ஆச்சரியமான கலவரமடைந்து திடுக்கிட்டாள். இரண்டாம் முறையாக அவளது பார்வைக்குக்காணப்பட்ட கடித எழுத்து யாருடையதென்று பார்த்தபோது அது தன்னுடைய தகப்பனருக்கு வாசகம் எழுதப்பட்டதாயிருந்தது. இது யாருடைய எழுத்தென ஆவலுடன் பார்த்து அது எங்கேயிருந்து எழுதி அனுப்பப்பட்டிருக்கின்றதெனத்தபாலாபீஸ் முத்திரையைக் கவனித்தவுடன் உடனே நடுக்கமுண்டாக அக்கடிதத்தின் உள்வாசகத்தை பார்த்ததினால் ஆலோசனையும் ஆச்சரியமும் பயங்கரமான பதறுதலும் தடுமாற்றமும் உண்டாகி, எள்ளளவும் தாங்கமுடியாமலிருந்தாள். அக்கடிதத்தை மீட்டும் வாசித்து நாத்தழுதழுத்து உரைதடுமாறி மெல்லிய மூச்சுடனும் ஆயாசத்துடனும் இருந்த கதிரையிற்சாய்ந்து சந்திரவதனத்தைக் கைகளால் மூடி மூர்ச்சையாயினள். அவளிருந்த அறை சுடுகாடு போல அமைதியாய் விட்டது; மூச்சுவரவுமில்லை; நாடி அடிக்கவுமில்லை; தேகம் அசையவுமில்லை. அற்பமேனும் உயிர் இருக்கிறதென்ற அடையாளமில்லை. இந்தநிலைமையில் சிலநிமிஷங்கள்சென்றுவிட்டன. தன்னுடைய கையிலிருந்து நழுவி விழுந்த கடிதத்

தைக் குனிந்தெடுத்தாள். குறித்த கடிதமே இவைகளெல்லாவற்றையும் கொண்டுவந்துவிட்டது. பூங்காவனம் எழுந்திருந்து அமைதியாகவும் மெதுவாகவும் வாசிக்கின்றாள். இந்த அமைதி பனிக்கட்டி உறைந்த சமுத்திரம்போலிருந்தது. காகிதத்தை வாசித்து முடித்தவுடன் இளமையும் வனப்பும் பொறுமையும் உள்ள அவளது முகத்தில் சகிக்கமுடியாத துக்கம் தோற்ற ஏதோகூறியதாக விளங்காவிட்டாலும், ஆ! கிருபாநிதியே! தேவரீரை நமஸ்கரிக்கின்றேன்; தேவரீரால் அமைக்கப்பட்ட கற்பனையைமாற்றமுடியாதென்று கூறி மனதைத் தைரியப்படுத்தி மேசைக்குளிருந்த மற்றைக் கடிதங்களையும் பார்த்தாள். முதலாவதாகக்கண்ட காகிதத்திலுள்ள எழுத்தைப்போன்ற இன்னொருகடிதம் இருந்தது. அதுசமீபத்தில் எழுதப்பட்டதென்பதை நன்றாக அறியக்கூடியதான கிட்டிய தேதி உள்ளதாகவிருந்தது. பூங்காவனம் இதைத் திறந்துவாசித்தவுடன் அவளுக்கு அச்சமும் சோர்வும் நடுக்கமும் உண்டாய்விட்டன. அவள் வெகுநேரமாகக் கண்ணீர்சிந்தி அழுதனள்; கையை உதறினாள்; ஒருகாலத்தும் சகிக்க முடியாத துக்கப்பட்டு ஒருவாறுதேறி அந்தநிலைமையினின்றும் விலகிக் கொள்ள அவளுக்குவெகுநேரமாகிவிட்டது. பின் அக்கடிதங்களையெல்லாம் குறித்தமேசைக்குள் வைத்துப்பூட்டிவிட்டுத்தந்தையாரின் எஞ்சிய கிரிகைகளெல்லாம் முடிந்தபின் சிலவாரம் தனியேவசித்தற்குத் தாதிமூலமாக நாயகரிடம் உத்தரவுபெற்று அன்று முழுவதும் தன்னுடைய அறையிலேயேயிருந்து விட்டாள். ஜமீன்தார் அந்த மேசைக்குள் ஏதோ இருந்ததாக எண்ணிக்கொண்டு தொந்தரை செய்யாது அவளது மனப்போக்கின்படியேவிட்டுவிட்டார். அவள் நாயகருக்கு மற்றைநாட் காலைப் போசனம் கொடுக்கும் பொழுது தன்னுடைய துக்கநிவிர்த்தி காரணமாகத் தனித்துவசித்தற்குவிரும்பிக்கேட்டதற்கு மறுக்காது உத்தரவு கொடுத்தபடியால் ஸ்துதி கூறினாள். நாயகர் நாயகியின் முகவாட்டத்தைக் கண்டபொழுது அவளுடைய பிதாவின் ஞாபகத்தைக் கொண்டுவரக் கூடியதான எதையோ கண்டு பிடித்ததாக எண்ணி அதை அறிய விரும்பியும் அச்சமயம் அதுபற்றி விசாரித்தால் தப்பாது துயரத்தையுண்டாக்குமெனத்தெரிந்து அவளுடன் ஒன்றும் பேசாதுவிட்டனர்.

(இன்னும் வரும்)

மா. சிவராமலிங்கம் பிள்ளை,
"ஆறுமுகநாவலர்" வாசிகசாலை.

ஜேம்ஸ் ஆலன்.

ஜேம்ஸ் ஆலன் இங்கிலாந்து தேசத்தில், லீஸ்டரென்னுமிடத்தில் 1864-ம்௵ நவம்பர்மாதம் 28-ந்தேதி பிறந்தவர். இவருடைய பிதா அநேக நூல்களை வாசித்து உணர்ந்தவராதலின், தமது குமாரனுக்கு இளம் பிராயத்திலேயே கல்வி அறிவில் ஆசை மிக்கிருந்ததை நன்கு அறிந்து கொண்டார். "விளையும்பயிர் முளையிலேயே தெரியும்" அல்லவா? மிக்க தாகமுள்ளவன் நீரினிடத்துக் கொள்ளும் ஆசைபோல, ஆலன் தனிமையேசென்று புத்தகங்களைப் படிப்பதில் ஆசையுடையவராயிருந்ததை அடிக்கடிகண்ணுற்றதகப்பனார்' என் மகனே! நீமிகப்பெரிய படிப்பாளியாவாய்' என்று பன்முறையும் கூறியதுண்டு. சிலவேளைகளில், ஆலன் படித்துக் கொண்டிருக்கும்பொழுது, பிதா அருகிலிருந்து அதிககவனமாய்க் கேட்பார். அப்பொழுது ஜீவியத்தைப் பற்றிய சிலகேள்விகளை (Life problems) ஆலன் தகப்பனாரிடம் கேட்டால், அவற்றிற்கு மறுமொழி கூறவியலாது அவரே திகைப்பாராம்; அப்பொழுது ஆலனே மிகுந்தவணக்கத்துடன் தமக்குத் தெரிந்தவரை தமது பெரியவினாக்களுக்கு விடைபகர்வர். அதற்குத் தந்தை "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லா மினிது" என்பதற்கிணங்க மிகமகிழ்ந்து, "மகனே! இவ்வளவு அறிவு ஒரே ஜன்மத்தில் வரக்கூடியதல்ல. நீ முன்னமே வாசித்திருக்கிறாய் போலும்" என்று கூறுவாரேயானால், நான் இங்கு அவர் புத்திக் கூர்மை முதலிய வற்றைப் பற்றி விரித்துரைக்க வேண்டியதில்லை.

ஆலன் குழந்தைப் பருவத்தில் தேகபலம் அதிகமாயில்லாதவராயினும், விஷயபரிசிலனைசெய்து சிந்திக்கும் ஆற்றலை அதிகமாக வுடையவராயிருந்தார். அதையறிந்தவர்கள், அவ்வளவு தூரம் யோசித்தல் தேகத்துக்குக் கெடுதிவிளைக்குமெனச்சொன்னார்கள். தகப்பனாரும் "ஆலனே! இவ்வளவு நீயோசித்தால், சீக்கிரம் இறந்துபோவாய்" என்று தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினார். இதைப் பிற்காலத்தில் பன்முறை ஆலன்நினைக்கும் போதெல்லாம், புன்சிரிப்பாய்ச் சிரித்துக் கொள்வதுண்டு.

நிற்க; ஆலன் படிப்பில் மிகுந்த ஊக்கமுடையவராயினும், தேகப்பயிற்சியில் ஊக்கமில்லாதவரல்ல; எந்தெந்த நேரத்தில்

எதெதைச் செய்யவேண்டுமோ, அதைபதைத் தமது முழுமனதோடும் தவறாது செய்துவிடும் சுபாவமுள்ளவர்; எதற்கும் அரைகுறையான கவனமே செலுத்துபவரல்ல. விளையாட்டானாலும், படிப்பானாலும், அவர்சித்தத்தை ஏகமாய்க்கிரகித்து நின்றதே; அவரடைந்த உன்னதபலன்களுக்குக் காரணமாகும்.

இனி இளைஞனபோது, சில இஷ்டர்கள் அல்லதுசகோதரருடன் பத்து இருபதுமைல் தூரம் உலாவுதல் ஆலனுக்கு மிகுந்த இன்பம் கொடுத்தது; அங்ஙனம் உலாவப் போகும்பொழுது, சட்டையின் பைகளில் ரொட்டிமுதலியவை கொண்டுபோவது வழக்கம். அவர் அக்காலத்தில் அடிக்கடி இயற்கைப் பொருள்களின் வனப்பை உற்று நோக்கி இணையிலா இன்பம் பெற்றார்; அவர்க்கு எவ்வுயிரிடத்தும் அன்புபெருகிவழிந்தது ; அப்படியாயின், கடவுள்மீது ஒப்பிலா உயர்ந்த பக்தியிருந்ததென்பது ஆச்சரியமல்ல. சிலஜந்துக்களும் அவரிடம் அன்புகாட்டியதுண்டு, சாதாரணமாய் நம்மைக்கண்டதும் ஓடியொளிக்கு மியல்புள்ள பிராணிகளெல்லாம், அவரிடம் பயமின்றி நெருங்கி விளையாடுவதை நண்பர் பலர் பன்முறை கண்டிருப்பதொன்றே அதற்குப்போதுமான சான்றும்.

பதினைந்தாவது வயதில் அவருக்கொரு பெருங்கவலை ஏற்பட்டது; தகப்பனாரிட மிருந்த பணமெல்லாம் பாழாய்ப்போய் விட்டது. வேறு ஐசுவரியமுமில்லை. குடும்பசம்ரக்ஷணையின் பொருட்டு, அமெரிக்காக் கண்டத்துக்குப் புறப்பட்டுப்போன தந்தையார் எக்காரணத்தாலோ அவ்விடத்தையடைந்த இரண்டுதினத்திற்குள் "நியூயார்க்" ஆஸ்பத்திரியில் இறந்துபோனார். அவரிடம் எஞ்சியதாகக் குடும்பத்தாருக்குக் கிடைத்தது, வெள்ளிக்கடிகாரமொன்றே. தாயையும், தம்பிருசகோதரரையும் சம்ரக்ஷிக்கவேண்டிய பாரமுழுவதும் பதினைந்துவயது பாலியராகிய ஆலன் மீது விழுந்தது. அந்தோபாவம்! அவர் தனியே என் செய்வர்? ஒவ்வொரு தினமும் சுமார் பதினைந்துமணிநேரம் வேலைசெய்யவேண்டியவராயிருந்தார். தந்தையிறந்தும், செல்வம்மறைந்தும், கல்வியின்மீதுள்ள ஆசை மாத்திரம் அவர்க்குக் குறையவில்லை யாதலின், படிப்புக்கு வேறுஇரண்டு மூன்று மணிநேரம்செலவழிந்தது; மீதியுள்ள சிறிது காலமே நித்திரைமுதலிய நித்திய கடன்களுக்குப் பயன்பட்டது. அங்ஙனம் கஷ்டமனுபவித்தற்குப்பலனில்லை யெனல் பொருந்

தாது; ஏனெனின், ஆலனே ஓரிடத்தில் "அதிகமாய்க் கஷ்டப்படுவது அநேக பாஷைகளை அறிந்ததுபோலவாகும்" எனப்பொருள்படும்படி (To have suffered much is like knowing many languages) என்று கூறியிருக்கின்றார். 'பாடின்றிப் பலனில்லை''.

ஆலன் பதினேழாவது வயதில் ஷேக்ஸ்பியர்படிக்கத்தொடங்கினார்; எப்பொழுது சில நிமிஷ அவகாசம் கிடைத்தாலும், ஷேக்ஸ்பியரின் நாடக காவியங்களைப் படிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். ஆதலின், அவை சிலகாலத்துக்குள், அவர் அக்கிரந்தங்களைப்பாராமல் ஒப்பிக்குமளவுகூட, மனத்திற்பதிந்துவிட்டன. "வைத்ததோர் கல்விமனப்பழக்கம்" தானே. "வருந்தினால் வாராத தொன்றில்லை" அன்றோ?

இவ்விதம் அறிவு மீதுள்ள ஆசை வளர வளர, மெய்யுணர்தலொன்றையே அவரது சிந்தை தனது பெரிய இலக்காய்க் (Goal) கொண்டது. தகப்பனார் அநுஷ்டித்து வந்தசமயக்கொள்கைகளுள் சில, ஆலன்மனத்துக்குப் பொருந்தவில்லை; உதாரணமாக:—கொடிய நரகசித்திய தண்டனை சம்பந்தமாகப் பரவியிருந்த சாதாரணக் கொள்கைகளிடம் அவர்க்குச் சிறிதும் நம்பிக்கை சென்றிலது. அவருடைய நல்லொழுக்க நாட்டம் என் அளவிடுந்தரத்ததன்று. புலாலுண்ணலாவது, லாகிரிவஸ்துக்களை உபயோகித்தலாவது கூடாநட்பாவது அவரிடம் கிடையாது. தியாரும் அவரைக்கண்டால் நல்லோர்போன்றேநடப்பர் ஒருகாலத்தில் அவர் மில் ஆபீஸில் வேலைக்குச் செல்லநேரிட்டபொழுது, ஏனையோர் கெட்டவார்த்தைகள் நிரம்பஉபயோகித்து வந்ததை அறிந்தார். ஆனால் சிலகாலத்துக்குள் அவர்கள் அத்துர்வழக்கத்தினின்றும் எவ்வழியாலோ நீங்கிவிட்டார்கள். அதற்குக் காரணம், நற்குணக்குன்றேறி நின்ற ஆலனன்றியாராயிருத்தல் கூடும்?

இருபத்து நான்காவதுவயதில் "ஆசியாவின்விளக்கம்" (The Light of Asia) என்றபுத்தகத்தைக்கூர்ந்துபடித்தபொழுது, இவருடைய ஆன்மா இதுகாறும் எதைவிரும்பி எதிர்பார்த்துகின்றதோ, அஃதாவது (Cosmic Vision) பிரஹ்ம ஞானம் கிடைத்தது; அப்பொழுது தான், அவர் மெய்ப் பொருளைத் தேடும் வேலையைத் தொடங்கினாரென்றுசொல்லலாம்.

இது நிற்க; இவருக்கு விவாகம் நடந்த விதம் சிறிது வியப்பை விளைவிக்குமாயினும், விரித்துரைக்க எனக்கு இடமில்லை. கலியாணமாகி மூன்று நான்கு வருடங்கள் சென்றதும், அல்லது ஆலனுக்கு முப்பத்து மூன்று வயதாகியதும், அல்லது (நோரா ஆலனென்ற பெயருள்ள) ஒரே ஒரு பெண்குழந்தைக்கு ஒன்றரை வயதாகியதும், இவரிடம் ஒரு பெரிய மாறுதல் காணப்பட்டது. முப்பதாமாண்டளவில் மூன்றற் றொருபொருளைத், தப்பாமற் றன்னிற்பெற வேண்டும் என்ற மூதுரைப்படி அநேகமாய் நடந்தனர்போலும்! இவ்வயதிலேயே இவர் காமவிச்சையை முழுவதும் வென்றுவிட்டார். உடனே இவர்க்கு வைகறைத் துயிலெழும் வழக்கம் ஏற்பட்டது. "முதல்வெம் பவத்துக்கெனுமடமை முற்றுமொழியச் செம்பொருளைச், சுதமென்பதற நினைத்தலை தூயசமாதி" என்றபடி, தெய்வசிந்தனை முதலியவற்றிற்கு (Cairn) கேயர்ன் என்றவொரு குன்றின்மேலேறிச் சிலமணி நேரம் தமது சஞ்சலமற்ற ஏகாக்கிர சித்தத்தைச் செலுத்தி வந்தார்.

கொஞ்சக்காலத்துக்குள், இவருடைய முதற்புத்தகம் (From Poverty to Power) வெளியாயிற்று. அநேகர் இதையே இவர் எழுதியுள்ள சுமார் பதினைந்து புத்தகங்களுள் சிறந்ததென இப்பொழுதும் எண்ணுகின்றார்கள். இவர் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை "பிரைவேட் செக்ரட்டேரி" அலுவல்பார்த்ததால், ஏனைய அவகாசத்தையெல்லாம் புத்தகங்கள் எழுதுவதிலேயே கழித்தார். அதனால் (All these things added) என்றபுத்தகமும், 'மனம்போல வாழ்வு' (As a man thinketh) என்பதும் வெளிப்பட்டன; பின்னர்க் கூறிய நூலே அவருடைய நூல்களிலெல்லாம் மிகப்பிரசித்திபெற்றதும், அதிகமாய்வாசிக்கப்படுவதுமாகும். இச்சந்தர்ப்பத்தில், (Light of Reason) என்றபத்திரிகை ஒன்று ஆரம்பித்துக்கொண்டார்; அதன்பெயர் சிலகாலத்துக்குள் (Epoch) என்றுமாற்றப்பட்டு, இப்பொழுதும் மாதாந்தப் பத்திரிகையாக, இவருடைய மனைவியாராகிய லில்லி ஆலனென்றமாது சிரோமணியால் நடத்தப்பட்டு வருகின்றது. அதனோடு உலகத்தில் உண்மையையறிவதில் நோக்கமுடையவர் எப்பாகத்திலிருப்பினும், அவர்களோடெல்லாம் கடிதப்போக்குவரவு இவர் வைத்திருந்தது கவனிக்கத்தக்கது. பைபில், பகவத்கீதை, புத்தர், மில்டன், எமர்சன், பிரௌனிங், வால்ட் விட்மான், ஷேக்ஸ்பியர், ஆசியாவிளக்கம், டாக்டர் பக்கியின் 'பிரஹ்மஞானம்

(Cosmic Consciousness) என்பவை ஆலனுக்குமிகவும்பிரியமுள்ள வைகளைச்சேர்ந்த சிலபுத்தகங்களாகும்.

ஆலன் தேகசௌக்கியம் குன்றியகாலத்தும் கூடச் சோம்பலாய்க் காலத்தைக்கழிக்கமாட்டார்; அப்பொழுதும் வழக்கப்படி தெய்வசிந்தனை செய்வார்; ஏனைய வேலைகளைச் செய்யாமலிருக்க மனைவிமுதலியோர்வேண்டிக் கொள்ளும்பொழுது கூட 'என்வேலை முடிந்து விட்டதென்றால், நான் உடனேபுறப்பட்டுவிடவேண்டும்; ஆதலால் தடுக்காதே' என்பாராம். அவ்விதம் 1912ஞு ஜனவரி 12உ வரைஉழைத்துவிட்டு "என்வேலைமுடிந்தது, இனி இயலாது, வந்தவேலை முற்றுப் பெற்றது" என்று கூறி விட்டார். பின்பு, ஜனவரி 24உ புதன்கிழமை அதிகாலை அமைதியாய் அவரது உயிர் பிரிந்துவிட்டது. சரீரம் அக்கினியில் தகிக்கப்பட்டுச்சாம்பல் நாலா பக்கமும் பரவியது. அஃது இவர்போதித்த உண்மைகள் உலகெங்கும் பரவுவதைக் குறித்ததுபோலும்!

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்."—திருக்குறள்.

நெல்லை. மாணிக்கவாசகன்.

கடவுளைத் தொழப் போவார்க்கு ஒருநன்மதி.

காலஞ்சென்ற குவீன் விக்டோரியாவின் பிரதான மந்திரிகளில் மிகச் சிறப்பும் கீர்த்தியும் பெற்றிருந்த கிளாட்ஸ்டன் (Gladston) தொழுது வந்த கோயிலின் முன் தாழ் வாரத்தில், அந்தக் கோயிலுக்குத் தொழப்போவார்களின்ஞாபகார்த்தமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு விசேஷ விளம்பரம் தொங்கவிடப் பட்டிருக்கும். இதனை எல்லாக்கோயில்களிலும்அங்குச் செல்வாரது உபயோகத்தின் பொருட்டு எழுதி விளம்பர மாக்குமாறு ஒரு பெரியவர் தமது புஸ்தகத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் கூறி யுள்ளார். இவ்விளம்பரம் நமக்கும் ஒப்ப முடியுமாதலின், ஆங்கிலத்தி லிருந்து மொழி பெயர்த்து வெளி யிடப்பட்டது.

கோயிலுக்குப் போகும் போது.

கோயிலுக்குப் போகும் போது சிந்தனுபரனுகவும் சாந்தமாக வும் இரு; அல்லது பேச நேரிடின், சிறிது சொல்; அச்சிறிதும் நன்மை யுடையனவாக இருக்கட்டும். பிறருடைய குற்றங்களைப் பற்றிப் பேசாதே. உன்னுடைய சொந்தமானவற்றை (காரியங்க ளை)ப் பற்றி நினை. ஏனென்றல் நீ மன்னிப்புக் கேட்கும் பொருட்டு அங்குச் செல்லுகின்றய். ஒரு போதும் கோயிலின் வெளிப்பக்கங் களில் தங்காதே; ஆனல் உடனே உள்ளே செல். உள்ளே கழிக் கும் காலம் மிக்க அருமையானதாக இருக்க வேண்டும்.

கோயிலுக்குள்.

மிக்க விநயத்தோடு முழங்கால் படியிட்டு (கை கூப்பித் தலை வணங்கி) துதி செய். மிகுதியுள்ள காலத்தையும் துதிப்பதில் செ லுத்து. மிக மேலான பொருளின் முன் நீ வந்திருக்கின்றய் என் பதை ஞாபகப்படுத்திக் கொள். உள்ளே யார்வருகிறர்களென்று பார்க்கவாவது அல்லது இன்னும் இதர காரணங்கள் பற்றியா வது முன்னும் பின்னும் பாராதே. பிறர் செய்யும் காரியங்களைப் பற்றி உனக்குச் சிறிதேனும் சம்பந்த மில்லை. உன் விஷயத்தில்கவ னம் வை. இறைவனை வழி படுதலாகிய அந்தப் பரிசுத்தமானதொ ழிலில் உன்னுடைய சிந்தனையை வைராக்கியத்தோடு செலுத்து. (பாதிரியார் சொல்லும் பிரசங்கத்தில்) ஒரு வார்த்தையையும் விடாதே; இதனை அடைய மிக்க வைராக்கியம் வேண்டும்; வியர்த்த மான எண்ணங்களுக்கு உனக்குக் காலமில்லை. இதில் நீவிடாமுய ற்சி கொள்ளின், பரிசுத்த ஆவி (இறைவன்) உன்னை வலிமை யுடைய தாக்கும்.

தொழுசல் முடிந்த பிறகு

முழங்கால் படியிட்டு (நமஸ்கரித்து) சற்று இருந்து ஸ்தோத் திரம் செய். உள் நோக்கம் கொள்; நீ வெளியில் வரும் வரை யில் எவரோடும் வார்த்தை யாடாதே. தொழுதல் முடிந்த பிறகு கூடக் கோயில் கடவுளின் வீடு என்று கருது. கோயில் பிரகாரத் தில் நீ போகும் போது மனே அமைதியுடையவனுகவும் சிந்தனு பரனுகவும் இரு.

வீட்டுக்குப் போகும் வழியில்.

உனது சம்பாஷணையில் நீ ஜாக்கிரதை யுடையவனாக இரு; அல்லாக்கால் உலகம்உன்னுடைய இருதயத்துக்குள் சீக்கிரத்தில் நுழைந்து விடும் (உலகப் பொருள்கள் உனது மனத்தைக் கவர்ந்து விடும்) நான் எங்கே போய் என்ன செய்தேன் என்பதை ஞாபகப் படுத்திக்கொள். இன்னும் மேலான வாழ்க்கையோ டிருக்கத் தீர்மானித்து முயல்.

(மேலே நகக்குறிக்குள் எழுதப்பட்டுள்ளன வற்றிற்கு முன்னே யுள்ள விஷயங்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு மிக எளிதில் விளங்குமோ என்னும் ஐயம் கொண்டு எழுதப்பட்டன. இவை விளக்கத்திற்கே யர்தலின், ஆங்கிலத்தில் கண்டன வல்ல.)

வா-ஆறுமுகசெட்டியார்,
முத்தியாலு பேட்டை, சென்னை.

நால்வகைச் சுத்தம்.

ஒவ்வொருவருக்கும் வாக்குச் சுத்தம், காயச்சுத்தம், மனச் சுத்தம், ஆன்மச்சுத்தம் என்னும் நான்கும் அத்தியாவசியகமாக வேண்டப்படுவனவாம். வாக்குச் சுத்தம் இலக்கணநூல் தர்க்க நூல் என்னும் இவற்றை நல்லாசிரியரிடத்து வரலாற்று முறையாக ஓதுவதா லுண்டாவதாம்; காயச்சுத்தம் மருத்துவ (வைத்திய) நூல் கூறியவாறு ஒழுகுவதா லுண்டாவதாம்; மனசுத்தம் தீய வெண்ணங்கள் எழும்போதே அவற்றை யெழாவாறு பிரயத்தன பூர்வகமாக அடக்குவதா லுண்டாவதாம்; ஆன்மச் சுத்தம் தேக மித்தன்மையது, தேகி யித்தன்மையது என்று வரையறை செய்து கூறும் தத்துவசாஸ்திரங்களை நல்லோர் வாயிலாகப் பன்முறை யாராய்ச்சிசெய்து ஆராய்ச்சி செய்தவா றொழுகுவதா லுண்டாவதாம். இந்நால்வகைச் சுத்தமும் பரமசுகத்தைப் பெறுவதற்குத் தக்க காரணங்களா யிருத்தலின், இந்நான்கையும் பெற ஒவ்வொருவரும் அத்தியாவசியமாக முயலுதல் வேண்டும்.

நெல்லை-நெல்லையப்பன்,

வர்த்தமானங்கள்.

ஒரு நன்கொடை.

பாடியாலா மகாராஜா டெல்லியில் இனி ஸ்தாபிக்கப்படும் ஆயுள்வேத யூனனிக் காலேஜுக்குத் தாம் கொடுப்பதாகக் கூறியிருந்த 25, 000 ரூபாயையும் உடனே கொடுத்துவிடும்படி உத்தரவு செய்திருக்கின்றார்.

தந்தையால் சிட்சையடைந்த ஒரு மைந்தன்.

யாழ்ப்பாணத்திலுள்ள கம்பனியில் வசிக்கும் ஒரு சிங்களவன் தன் மகன் கள்ளச்சாவி போட்டுப் பெட்டியைத் திறந்து 659 ரூபாய் திருடினுனென்று ஒரு வழக்குத் தொடுத்தான். ரூபாயை யெடுத்தவன் அந்த ரூபாயைக்கொண்டு ஒருகடைவைத்திருக்கிறேன்; என் தகப்பனிடத்து 200 ரூபாய் கொடுத்திருக்கிறேனென்று கூறினன். தந்தை அதனை ஒத்துக்கொண்டு தன் மகனுக்கு அபராதமாத்திரம் விதிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். நியாயாதிபதி அவனுக்கு ஒருமாதங் கடுங்காவற்றண்டனை விதித்தனர்.

சென்னைக் கவர்னர்.

நமது சென்னைக் கவர்னரவர்கள் சேலப்ஜில்லாவிலுள்ள ஓமலூருக்குப் போனபோது தலையாரிகளுள் 70 பேரையும். கர்ணங்களுள் 100 பேரையும் கண்டு பேசினர். அப்போது தலையாரிகள் தமது நீண்ட தடிகளைக் கையில் பிடித்துக்கொண்டு பித்தளைப் பில்லைகளைத் தோளின்கீழ்க் கட்டிக்கொண்டு வரிசையாக நின்றிருந்தனர்; கர்ணங்களோ தமது கிராமக் கணக்குக்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு, சர்வேய்க்கு வேண்டிய சங்கிலி முதலிய சாமான்களுடன் வரிசையாக நின்றிருந்தனர்.

கொள்ளையும் கொலையும்.

ஹூடியான டிஸ்டிரிக்டைச்சேர்ந்த ஹாதூரில் 7 கொள்ளைக்காரர்கள் தீவர்த்தி, ஈட்டி, குண்டுமுதலிய முஸ்திப்புடன் ஒரு சாவுகாரிவீட்டிற் பிரவேசித்து பத்தாயிரரூபாய் மதிப்புள்ள நகைகளையும் பதினயிரம் ரூபாய் ரொக்கத்தையும் கொள்ளைகொண்டு போயினர். அவர்களவ்வீட்டில் நான்கு மணிநேர மிருந்தனர். அயல்வீட்டுக்கார னெருவனும், ஒரு வேலைக்காரனும் கொள்ளைக்காரரிடமிருந்து தப்பிப்போகப் பிரயத்தனப் பட்டனர்; அவர்களைக் கொள்ளைக்காரர் சுட்டுக் கொன்றனர்.

ஒரு சுரங்கத்தொழிற் பாடசாலை.

பீஹார் கவர்ன் மெண்டாரும் வங்காளக் கவர்ன் மெண்டாரும், அவ்விரண்டு மாகாணங்களிலும் சுரங்கத்தொழில் நடக்கும் ஜில்லாக்களில் ஒரு சுரங்கத்தொழில் பாடசாலை ஸ்தாபிப்பதை பற்றி யோசித்துக் கூற, ஒரு ஜாயிண்ட் கமிட்டி நியமிக்கத் தீர்மானித் திருக்கின்றனர்.

ஒரு கொடுஞ் செயல் - கல்கத்தா.

சென்ற மேமாதம் 27-ந்தேதி கோஹாவில் வியாபாரியாயிருக்கும் ஒரு பிராமணரின் 8 வயதுள்ள குமாரத்தி துளசி என்பவள் அங்குள்ள நதியில் ஸ்நாநஞ் செய்யச் சென்றாள். அக்கிராமத்தில் கடைவைத்திருக்கும் ரூபாசாவ் என்பவன் யாதுகாரணத்தினாலோ பெண்ணைக் கீழேதள்ளிப் பெண்ணின் மீது உட்கார்ந்து பெண்ணின் தொண்டையைக் கடித்துக் கொண்டிருந்தான். பெண்கூக்குர லிட்டனள்; அங்குப்பல ரோடிவந்து அவனைப் பிடித்துக்கொண்டனர்; அவனுடைய வாயும் துணியும் ரத்தமயமாயிருந்தன. பெண் உடனே இறந்துவிட்டாள். இக்குற்றத்திற்காக அவன் பாகல்பூர் செஷன் கோர்ட்டில் மரண தண்டனை விதிக்கப் பட்டான். இக்கேசு கல்கத்தா ஐக்கோர்ட்டில் விசாரிக்கப் பட்டது. டாக்கா ஜெயில் சூப்பரின் டென் டெண்ட் ரூப்சாவ் பயித்தியம் பிடித்தவனென்று மாஜிஸ்டிரேட்டின் முன்னர் வாக்கு மூலங் கொடுத் திருக்கின்றார்.

ஒரு பெருஞ் சூதாட்டம்.

சென்றமாதம் 28-ந்தேதி யிரவு கல்கத்தா போலீஸார் அங்குப் பார்த்தோலா வீதியி லுள்ள ஒரு வீட்டில் சூதாட்டம் நடைபெறுகின்றதென்றறிந்து திடீரென்று பிரவேசித்தனர். அங்கு 50 பேர் சூதாடி யிருந்தனர்; அவர்களிடத்து 21,000 ரூபாயிருந்தன. போலீஸார் அவர்களை அந்த ரூபாயோடு கைதுசெய்தனர். அன்றிரவே வேறிரண்டிடங்களில் சூதாடுவோர் பலரைப் போலீஸார் கண்டு பிடித்துக் கைதுசெய் திருக்கின்றனர்.

ஒரு மூட மந்திரவாதியின் கொடுஞ் செயல்.

பரத்வான் டிஸ்டிரிக்டிற்கு வடக்கேயுள்ள ஒரு கிராமத்தில் ஒரு மாந்திரீகன் தனது மாந்திரீக பலத்தால் செத்தவரை உயிர் பெறச்செய்யும் வித்தையைத் தனது குருவினிடம் கற்றுக்கொண்டிருப்பதாகக் கூறித் தனது மனைவியை மயானத்திற் கழைத்துக் கொண்டு போய், அவளைக் கொன்று அவள் பிரேதத்தின் மீது உட்கார்ந்து கொண்டு ஜபஞ் செய்தான்; ஜப முடிந்ததும் தனது மனைவி உயிர் பெறவில்லை; அவன் பயங்கொண்டு ஓடி ஒளித்துக் கொண்டான். போலீஸார் அவனைப் பிடிக்கத் தேடி திரிகின்றனர்

ஒரு ராவண சந்நியாசி.

கல்கத்தா புவலேஷ்வர ரோட்டில் நந்தாராம் சீத்தாராம் என்பவர் ஒரு கடைவைத்திருக்கின்றார், அங்குச் சில நாள்களுக்கு முன்னர் ஒரு சந்நியாசி சென்று கடையி லிருந்த விக்ரகங்களின் விலையை விசாரித்துக் கொண்டிருந்தார். அவர் போனபிறகு கடைக்காரர் தம்மிடம் சவரனுகவிருந்த 540 ரூபாய் காணுமற் போனதென்று தெரிந்து போலீசாருக்கு அறிக்கை செய்திருக்கின்றார்.

ஒரு தருமச்செயல்.

ஆனரபில் ராவ் பகதூர் பி. சோமசுந்தரஞ் செட்டியார் கள்ளிக்கோட்டை டவுனுக்கு ஒரு சாவடியும் தண்ணீர் தொட்டியும் கட்டி யிருக்கின்றனர்; அந்துள்ள டிஸ்பென்சரிக்குக் கிணறொன்றெடுத்துத் தீபஸ்தம்பம் நாட்டியிருக்கின்றனர்.

பேர்பெற்ற ஒரு கண்வைத்தியர்

லீவின்மீது இங்கிலாந்திற்குச் சென்ற சென்னைக் கண்ணாஸ்பத்திரி சூப்பரின் டென் டெண்ட் கர்னல் எலியட் இப்போது அமெரிக்கா விற்குச் சென்றிருக்கின்றார். அவர் அங்கு ஒருவர்க்குக் கண் சம்பந்தமான வியாதியைச் சொஸ்தப்படுத்தி யிருக்கின்றார். இந்தவியாதி அங்கிருக்கும் டாக்டர் ஒருவராலும் தீரா திருந்ததாம்

ஒரு நன்கொடை.

சைன தேசத்தில் வசிக்கும் மகம்மதிய மதத்தினர் 4 மில்லியன் (40,00,000) பவுண்டு சந்தா மூலமாக வசூலித்துத் துருக்கிக்கு ஒரு போர்க்கப்பல் வாங்க நன்கொடையாகக் கொடுக்கப் போகின்றன ரென்று தெரிகின்றது.

ஒரு புது யந்திரம்.

மனிதனது இருதயம் எவ்வாறிருக்கின்றது: அது கெட்டிருந்தால் எவ்வாறு கெட்டிருக்கின்றது; அதனை யெவ்வாறு சீர்படுத்தலா மென்பனவற்றைவிபரமாகஅறிய "ஹார்ட்பமீாமீடர்" என்னுமொரு யந்திரம் புதுவதாகக் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றது. இந்த யந்திரம் இப்போது லண்டன் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட் டிருக்கின்றது.

பெரும் பணக்காரி.

இப்போது ஆஸ்டிரியாவில் அமெரிக்கப் பிரதிநிதியா யிருப்பவரது மனைவியான மிஸஸ் பிரடெரிக் கோர்ட் லாண்ட் பென்பீல்ட் என்பவரே மிகுதியாக இன்கம்டாக்ஸ் வரி கட்டுகின்றவராம். இவரது சொத்தின் மதிப்பு ஒரு கோடியே நாற்பது லட்சம் பவுண்டாம். இவர்க்கு அச்சொத்தி லிருந்து வருஷந்தோறும் எழு லட்சம் பவுண்டு வருகின்றனவாம். இவர் செலுத்தும் வரியின் தொகையோ 49000 பவுண்டாம்.

118 வயதுள்ள ஒரு ஸ்திரீ.

ஜர்மன் தேசத்திலுள்ள டார்மோவா என்னுமூரில் ஹெட்விச்ஸ்ட்ராம்ஞ வென்னும் 118 வயதுள்ள ஒரு ஸ்திரீ யிருக்கின்றாள். அவளிப்போதும் உருளைக் கிழங்கு பயிரிடுந் தொழிலைச் செய்து வருகின்றனள்.

ஒரு சோதிடம்.

கௌன்ட் லியோடால் ஸ்டாய் என்பவர் 1915 ம் வருஷத்தில் ஒருவன் தோன்றி ஐரோப்பா முழுவதையும் 1925 ம் வருஷ பரியந்தம் ஆளுவா னென்று சோதிடம் கூறுகின்றார். பிறகு மத சம்பந்தமாக ஒரு கலகமுண்டாகு மென்றுங் கூறுகின்றார்

மலேய நாடுகளிலுள்ள இந்துக் கூலிகளின் கஷ்டம்.

மலேய நாடுகளிலுள்ள ரப்பர்த் தோட்டங்களின் தலைவர்களும் மற்றவர்களும் ஒரு கூட்டங்கூடி, இந்துக்களின் கூலியைக் குறைக்க வேண்டு மென்று தீர்மானஞ் செய்து, தீர்மானஞ் செய்தவாறு. இந்துக் கூலிகளுக்குக் கூலியைக் குறைத்துக் கொடுத்து வருகினறனர். இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இப்போது 8 மணிநேரம் வேலைசெய்யும் இந்து ஆண்கூலி 30 காசும், இந்துப் பெண் கூலி 20 காசும் கூலியாகப் பெறுகின்றனர்.

இராக்காலத்தில் கடவுளைத் தொழுவோர்.

டார்ஞக் என்னுமிடத்தில் வசிக்கும் ஒரு வகைச்சாதியார் எப்பொழுதும் இரவிலேயே கடவுளைத் தொழுவார் களாம். இவர்கள் சமீப காலத்தில் ஒரு நிலம்வாங்கிக் கோயில் கட்டத் தொடங்கும்போது இரவிலேயே அதற்கு அஸ்தி வாரக்கல் தீவர்த்தி பிடித்துக் கொண்டு நாட்டினர்களாம்.

மரத்தைவெட்டியபோது ஒரு புத்த விக்கிரகம் அகப்பட்டது.

இரங்கூனைச் சேர்ந்த ஜியோகோனில் சிலதினங்கட்கு முன் ஒரு மரத்தை வெட்டியபோது வெள்ளைக் கல்லால் செய்த ஒரு புத்தவிக்கிரகம் அகப்பட்டது. அம்மரத்தை வெட்டியவன் அவ் விக்கிரகத்தை விளையாட்டுப் பொம்மையாக நினைத்து, அதனை அங்கிருந்த பிள்ளைகளுக்குக் கொடுத்துப்போய்விட்டான். அதனை யங்கிருந்த புங்கிகளும் பெரியோரு மறிந்து, அவ்விக்கிரகத்தை வாங்கிக் கோயிலில் வைத்து விட்டனர். அதனைக் கண்டு தரிசிக்கப் பலர் போகின்றனர்.

மதமாறியவர்

அயர்லாந்து தேசத்து லார்ட்டுகளில் ஒருவராகிய லார்ட் ஹெட்லி யென்பவர் தமது சொந்த மதமான கிறிஸ்தவ மதயூதில் வெறுப்புற்றி, முகம்மதிய மதத்திற் சேர்ந்து விட்டார்' இவர்க்கிப்போது வயது 68.

காலைச் சாப்பாட்டின் உறுதி.

பிரிட்டிஷாரைச் சிறந்த ராஜாங்கத் தாரகச் செய்தது, அவர்கள் சாப்பிடும் காலைச் சாப்பாடே யாமென்று ஒரு பத்திராதிபர் கூறுகின்றார்.

லண்டனுக்கு வந்துள்ள ஒரு காப்பிரி.

மிஸ்டர் எப் ஸீடீன் என்பவர் தென்னுப் பிரிக்காவிலுள்ள கிம்பர்லி சுரங்கத்திற் கருகே வசிக்கும் ஒரு காப்பிரியனை அவன் கல்ஹாரி பாலை நிலத்தில் திப்பறவைகளை வேட்டையாடும்போது கண்டு பிடித்துச் சிநேகமாக்கிக் கொண்டு, லண்டனுக்கு அழைத்து வந்திருக்கின்றார். இவனது பாஷை எந்த பாஷையோடுஞ் சேராத தாக விருக்கின்றதாம். இவனைப் பார்க்கப் பலர் வருகின்றனராம்.

கதாமஞ்சரி.

இஃதோரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கோண்ட
3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ் மோழிபெயர்ப்பு அடங்கியிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பாத கண்டத்தின் வடமேற் றெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவிர்த்திக்குமாறு இக்கதை சோம தேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமானந்தத்தைப் பயப்பிப்பதாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போன்று விளங்கும். இது யாவரும் செவ்விதி னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

சந்தாவிவரம்.

வருஷம் 1க்கு ரூ.	1	0	0
ஆறு மாதத்திற்கு	0	10	0
தனிப்பிரதி	0	2	0
வெளித் தேசத்திற்கு			
வருஷம் 1-க்கு	1	8	0
ஆறு மாதத்திற்கு	0	14	0
தனிப்பிரதி	0	3	0

விளம்பர விகிதம்

மாதம் 1க்கு பக்கத்திற்கு	1	0	0
,, ½ பக்கத்திற்கு	0	10	0
,, ¼ பக்கத்திகறகு	0	6	0
சில்லரை விளம்பரங்ளுக்கு வரி 1க்கு அணு	0	1	0

மானேஜர், லோகோபகாரி ஆபீசு,
கோமளீசுவரன் பேட்டை, சென்னை.